**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 163 /2023 , Kunnam P.S. PW -5** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெங்கட்ரமணன் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | சுவாமிநாதன் | Calling | : | உதவி பேராசிரியர், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அரியலூர். |
| Village | : | அரியலூர் | Religion | : | - |
| Taluk | : | அரியலூர் | Age | : | 39/2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.02.2026 | | | | | |

எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் தற்போது அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். கடந்த . 21.03.2023 ம் தேதி அன்று அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர் அருண்சங்கர் என்பவர் காலை 8.30 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்தபோது 32 வயதுடைய பாக்கியராஜ் என்பவரை சிகிச்சைக்காக அவருடைய உறவினர் அழைத்து வந்தார். அவரை பரிசோதனை செய்த மருத்துவர் அருண்சங்கர் அவரை உள்நோயாளியாக அனுமதித்தார். மேற்படி நபருக்கு வெட்டுக்காயம் வலது முழங்கை பகுதியில் 4X1X0.5 செ.மீ அளவில் காணப்பட்டது. சிராய்ப்பு காயம் வலது தொடை பகுதியில் 4X1 செ.மீ அளவில் காணப்பட்டது. மேலும் வலது கையின் ஆள்காட்டி விரல் கீழ் பகுதியில் 6X3x3 cm அளவில் வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி பாக்கியராஜ் என்பவருக்கு என்னால் CT Scan, மற்றும் Xray எடுத்து பார்க்கப்பட்டதில் வலது ஆள்காட்டி விரல் எலும்பில் ஏற்பட்ட முறிவின் காரணமாக கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். மேலும் அருண் சங்கர் என்னுடன் பணி செய்வதால் அவரின் கையெழுத்து, கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. மருத்துவர் அருண்சங்கர் அவர்களால் பதியப்பட்ட **விபத்து பதிவேடு அ.த.சா.ஆ 3 ஆகவும், என்னால் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று**

DMJCUMCOURTKUNNAM.

**அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

1. பாக்கியராஜ் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை நான் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரு நபர் கூர்மையான பாறையின் மீது விழும்போது மேற்சொன்ன கொடுங்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். இந்நீதிமன்றத்தில் மேற் சொன்ன CT Scan, மற்றும் Xray ஆகியவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC JM COURT, KUNNAM.